# <u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

**<u>அ.வ எண்: 111/2013 ராமமூர்த்தி (வாசா1) தேதி:28.10.2025</u>**

**<u>வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 1 முதல் 5,7,10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

சர்வே எண்.365 ல் உள்ள 9 ஏக்கர் 37 செண்ட் வெள்ளையத்தேவர் என்பவருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வெள்ளையத்தேவர் பெயரில் 1920 ம்வருட ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வெள்ளையத்தேவர் 9 ஏக்கர் 37 செண்ட் நிலம் சம்பந்தமான ஆவணம் என்னிடம் காட்டப்படும் வாசாஆ.1 என்றால் சரிதான். வாசாஆ.1 ஆவணத்தை பார்த்து சர்வே எண். 365 ல் உள்ள 9 ஏக்கர் 37 செண்ட் வெள்ளையத்தேவர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றோ அல்லது அவரது வாரிசுகளுக்கு ஒதுக்கப்பட்டது என்றோ கூறமுடியாது என்றால் இல்லை அந்தஆவணத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. சாட்சி தன்னிடம் காட்டப்படும் வாசாஆ.1 ஆவணத்தை படித்துபார்த்துவிட்டு பழையகாலத்து கூட்டுஎழுத்தாக உள்ளதால் தனக்கு தெரியவில்லை என கூறுகிறார். எனது நிருபணவாக்குமூலத்தில் பாரா 5 ல் மேற்சொன்ன வெள்ளையத்தேவர் வாரிசுகளுக்குள் 13.07.1920 ல்நடந்த பாகப்பிரிவினை படி அவரவருக்கு சொத்துக்கள் தனித்தனியாக ஒதுக்கப்பட்டது என குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 13.07.1920 ல்நடந்த பாகப்பிரிவினையில் 9 ஏக்கர் 37 செண்ட் யார்யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் பெரியராமையாதேவருக்கு ஒதுக்கப்பட்டது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட விவரம் வாசாஆ.1 ஆவணத்தை பார்த்து என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். பெரியராமையாதேவருக்கும் அவரது சகோதரருக்கும் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டதாக எனது நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ளநிலையில் எந்ததேதியில் நடந்தது என குறிப்பிடவில்லை என்றாலும் யார்யார் முன்னிலையில் நடைபெற்றது என குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். எனது தந்தையில் உடன்பிறந்த சகோதரரி பெயர்

ராமலட்சுமி. எனது தந்தைக்கு 2 மனைவிகள், நான் 2 வது மனைவிக்கு பிறந்தவர். எனது தாயாரின் முதல் கணவரான கிருஷ்ணசாமிதேவர் மூலமாக பிறந்த நபரின் பெயர் வள்ளியம்மாள். அந்த வள்ளியம்மாளின் மகன்தான் ஜீவானந்தம் . என் தாயாருக்கு 2 கணவர்கள் என்பதையும் அவர்கள் மூலம் குழந்தைகள் உள்ள விவரங்களையும் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 9 ஏக்கர் 37 செண்ட் நிலத்தை பெரியராமையாதேவர் 16.02.1962 ல் வாசாஆ.40 மூலம் எனது தந்தை செந்தூர்தேவருக்கு இனாம்செட்டில்மெண்ட் எழுதிகொடுத்துவிட்டார் என்பதுதான் எனது கட்சி என்றால் சரிதான். அந்த இனாம்செட்டில்மெண்ட் ஆவணம்தான் வாசாஆ.40 என்றால் சரிதான். அந்தஆவணம் முத்திரைதாளில் எழுதப்படவும் இல்லை பதிவுசெய்யப்படவும் இல்லை என்றால் சரிதான். வாசாஆ.40 அடிப்படையில்தான் தாவாசொத்தை பொறுத்து உரிமைமூலம் கோரி கட்சிசெய்து வருகிறோம் என்றால் சரிதான். 1962 ம்வருடம் மேற்படி 9 ஏக்கர்37 செண்ட் நிலத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் நான் அப்போது பிறக்கவேஇல்லை. அதனால்அதன் மதிப்பு எனக்கு தெரியாது. எனக்கு தெரிந்து வேறுஇடங்களை ஒருஏக்கர் ஆயிரம் ரூபாய்க்கு வாங்கியுள்ளோம். பிசாஆ.5 ஆவணம் எனது தந்தை செந்தூர்தேவர் விளாத்திகுளம் நிலவள வங்கிக்கு எழுதிகொடுத்த அடமானபத்திரம் என்றால் சரிதான். அதில் 7 வது இலக்கச்சொத்தாக சர்வேஎண்.365 ல் 9 ஏக்கர்37 செண்ட் நிலத்தில் கீழ்பக்கம் 1 ஏக்கர்50 செண்ட் அடமானம் வைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த 1 ஏக்கர்50 செண்ட் நிலத்திற்கு காட்டப்பட்டுள்ள 4 மால்விவரத்தில் எந்த இடத்திலாவது செந்தூர்தேவர் கையிருப்பு நிலம் காட்டப்படவில்லை என்றால் சரிதான். பிராது பாரா 6 ல் செந்தூர்தேவருக்கு முத்தழகு ஆசாரி என்பவர் 25.06.1980 ல் பட்டா பாத்திய விடுதலை யாதஸ்து எழுதிகொடுத்ததாக குறிப்பிடப்பட்டது என்றால் சரிதான். அந்த யாதஸ்து ஆவணம்தான் வாசாஆ.41 என்றால் சரிதான். வாசாஆ.41 பதிவுசெய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்தஆவணத்தில் ரூ.180 பெற்றுக்கொண்டு அந்தஆவணத்தை எழுதிகொடுத்தாக உள்ளது என்றால் சரிதான். அந்தஆவணத்தில் எனக்கோ என் வாரிசுகளுக்கோ எவ்வித பாத்தியமும் உரிமையும் கிடையாது என காட்டி எழுதப்பட்டது என்றால் சரிதான். வாசாஆ.41 நான்கு முத்திரைதாளில் எழுதப்பட்டது என்றால் சரிதான். அதில் முதல் தாள் 05.06.1980 தேதியில்

கரிசல்குளம் ராமசாமி பெயரில் வாங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அதில் முத்திரை தாள் எண்ணாக 510 காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 வது தாள் 05.06.1980 தேதியில் கரிசல்குளம் ராமசாமி பெயரில் வாங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அதில் முத்திரை தாள் எண்ணாக 512 காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 வதுதாள் 23.08.1979 ல் விளாத்திகுளம் பாண்டிவாதிரியார் பெயரில் வாங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அந்தமுத்திரை தாள் எண்ணாக 4176 என காட்டப்பட்டது என்றால் சரிதான். 4 வது தாள் 23.08.1979 ல் விளாத்திகுளம் ஆசீர்வாதம் வாதிரியான் பெயரில் வாங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அந்தமுத்திரை தாள் எண்ணாக 4186 என காட்டப்பட்டது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.